<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>

முன்னிலை: திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை
நடுவர், கொடுமுடி.

2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17ம் நாள் செவ்வாய்கிழமை

<u>M.P. No.3/2026</u>
<u>in</u>
<u>C.C.No.74/2025</u>

பொன்னர்சங்கர்,
த/பெ.செல்வம் – மனுதாரர்/எதிரி

//எதிராக//

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
கொடுமுடி காவல்நிலையம், குற்ற எண்.58/2025.
– எதிர்மனுதாரர்/குற்றம் சாட்டுபவர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 03.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பரமசிவம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றம் சாட்டுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை – I அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

அ.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 348ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு உறுதி கூற்றின் சுருக்கம்</u>:–

மனுதாரர்/எதிரிமீது எதிரிமனுதாரர்/குற்றம் சாட்டுபவர் சட்டப்பிரிவு 4(1)(C) of TNP Act–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் அரசு தரப்பு சாட்சி அ.சா.1 ஏற்கனவே 18.11.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில் அ.சா.1ஐ மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 14:29:10 +0530

போதிய தகவல் கிடைக்கப்பெறவில்லை. மேலும் மனுதாரர்/எதிரியின் மூத்த வழக்கறிஞர் அன்று வரவில்லை. அதனால் குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர்/எதிரி தரப்பில் அ.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது நியாயமாயும், அவசியமாயும் உள்ளது. ஆகவே மனுதாரர்/எதிரி தரப்பில் அ.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்/எதிரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்.**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டங்கள் மற்றும் உண்மைகளால் பரிசீலிக்கப்படவில்லை. மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். அ.சா.1 சாட்சி 18.11.2025ம் தேதி முதல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். மனுதாரர் கு.வி.மு.ச.பிரிவு 242(3)ன் கீழ் குறுக்கு விசாரணையை ஒத்தி வைக்க எந்த அனுமதியையும் பெறவில்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்புகள் கொடுத்தும் மனுதாரர் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை. மனுதாரர் இந்த வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் சாட்சியை மீண்டும் அழைப்பதற்கான சரியான காரணங்களை கூறவில்லை. ஆகவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனு உரையில் கூறியுள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் அ.சா.1 சாட்சியை 18.11.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை. அ.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்து மனுதாரர் தரப்பு வழக்கை மெய்ப்பிக்க வேண்டியது நியாயமாயும்,

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 14:29:19 +0530

அவசியமாயும் உள்ளது. ஆகவே அ.சா.1 சாட்சியை திரும்ப அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

5. இந்நிலையில் போதிய காரணம் இன்றியும், எதற்காக வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டு கூறாத நிலையிலும், மனுதாரர் கு.வி.மு.ச.பிரிவு 242(3)ன் கீழ் குறுக்கு விசாரணையை ஒத்தி வைக்க எந்த அனுமதியும் பெறாத நிலையிலும், போதிய வாய்ப்புகள் கொடுத்தும் மனுதாரர் தரப்பில் அ.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராத நிலையிலும், வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்திலும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடியாகத்தக்கது என்று எதிர்மனுதரர் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது.

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது இந்த வழக்கில் 18.11.2025 தேதி அ.சா.1 சாட்சியை முதல் விசாரணை செய்யப்பட்டு அ.சா.1 சாட்சி குறுக்கு விசாரணை ஏதும் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கு.வி.மு.ச.பிரிவு 242(3)ன் கீழ் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்க எந்த அனுமதியையும் பெறவில்லை என்றும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்புகள் கொடுத்தும் மனுதாரர் தரப்பில் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இவ்வாறான நிலையில் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களை பார்க்கும்போது அ.சா.1சாட்சி மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்–லை. மேலும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களை பார்க்கும் போது மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கக்கூடியதாகவே உள்ளது. மேற்கண்ட தவறுகள் எதிரியால் ஏற்பட்டது அல்ல என்பதை கருத்தில் கொண்டும், எதிரிக்கு அவரது வழக்கை மெய்ப்பிக்க அ.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ஒரு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 14:29:30 +0530

வாய்ப்பு அளிக்கும் பொருட்டும், நீதியின் நலன் கருதியும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8. அதே வேளையில் அ.சா.1 சாட்சி 18.11.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளது வழக்காவணங்களில் இருந்து தெளிவாக தெரிய வருவதால் மேற்படி காலம் தாழ்த்தியதை ஈடு செய்யும் பொருட்டு மனுதாரர், அ.சா.1 சாட்சிக்கு ரூ.500/–ஐ அ.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் நாளில் நேரில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர் அ.சா.1 சாட்சிக்கு ரூ.500/–ஐ அ.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் நாளில் நேரில் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 14:31:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>: – இல்லை –
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>:– – இல்லை –

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 14:31:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.